## ***DEPOSITION OF WITNESS***

## **IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM**

## **CC No.443/2015**

## **PW: 5**

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.வடிவேல் | Taluk : | கும்பகோணம் |
| Father's Name : | திரு. ராஜமாணிக்கம் | Calling : | LW5 |
| Village : | வில்லியவரம்பல் | Age : | 67 |

Solemnly affirmed by Thiru.S.Allan Border, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 07th day of October 2025.

Signature of Witness.

(Accused Present. Assistant Public Prosecutor Grade I Present. Defence counsel present)

முதல் விசாரணை :

நான் வில்லியவரம்பலில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் 09.05.2013 அன்று நிர்வாக குழு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். நிர்வாக குழு துணை தலைவராக திரு.மெலிக்கியூர் என்பவரும் நிர்வாக குழு உறுப்பினர்களாக நெடுஞ்செழியன், ஆதித்தியன், அம்பிகாபதி, கிருஷ்ணமூர்த்தி, கோவிந்தராஜ், அப்துல் அஜீஸ் ஆகியோர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நாங்கள் பதவி ஏற்கும்போது திரு.ஜோசப் மார்ட்டின் என்பவர் பொறுப்பு செயலாளராக இருந்தார். அவர் 2010 முதல் 2013 வரை மேற்படி பதவியில் இருந்தார். அவர் பதவியில் இருந்த

காலத்தில் ரூ.3,70,000/- நிர்வாகத்தில் குறைவாக இருந்தது. ஆகையால் அவர் மீது 81 விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் 09.05.2013 தேதியிட்ட தீர்மானத்தின் தலைவர் என்ற இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி தீர்மான புத்தகம் தொகுதி 3 ல் பக்கம் 105 அ.சா.ஆ.11 ஆகும். என்னிடம் காட்டப்படும் 09.07.2013 தேதியிட்ட தீர்மானத்தில் தலைவர் என்ற இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி 09.07.2013 ம் தேதியிட்ட தீர்மான புத்தகம் தொகுதி 3 ல் பக்கம் 132 அ.சா.ஆ.12 ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் அரசியல் கட்சியை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் அஇஅதிமுக கட்சியின் பொறுப்பில் உள்ளேன் என்றால் சரிதான். நான் தலைவராக இருந்தபோது அஇஅதிமுக ஆட்சிதான் இருந்தது என்றால் சரிதான். என்னை இந்த வழக்கு சம்மந்தமாக தஞ்சாவூரில் வைத்து விசாரித்தார்கள், தேதி ஞாபகம் இல்லை. எந்த போலீசார் விசாரணை செய்தார்கள் என்று பெயர் தெரியாது. கூட்டுறவு சங்கத்தில் எனது பணி என்ன என்றால் நிர்வாகத்தின் வரவு செலவுகளை பார்ப்பது ஆகும். சங்கத்தின் வரவு செலவுகளை மாதா மாதம் நானும் நிர்வாக குழு செயலாளரும் பார்ப்போம். அவ்வாறு மாதா மாதம் வரவு செலவு பார்ப்பதற்கான நோட்டு உள்ளது என்றால் உள்ளது, செயலாளர் வசம் இருக்கும். நோட்டு என் வசம் இல்லை. தொகையில் குறைபாடு இருந்ததை 09.07.2013 அன்று தான் ஆடிட்டர் கண்டுபிடித்து என்னிடம் சொன்ன பிறகுதான்

பிரிவு 81 விசாரணைக்கு தீர்மானம் இயற்றப்பட்டது. நான் சொன்ன நாள் நேரத்தில் அவ்வாறு எந்த தொகை குறைபாடும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரி திமுக கட்சியை சார்ந்தவர் என்பதால் அவரை பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் தொகை குறைபாடு இருப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

*Sd/S.Mahalakshmi,*
*Chief Judicial Magistrate,*
Thanjavur at Kumbakonam.